Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, FEBRUARY 01, 2023

புதன்கிழமை பெப்ரவரி 01, 2023 | ஒளி: 08 கதிர்: 199 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு

# மன்னிக்கவும்



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தாம் போட்டியிடவுள்ளதாக அறிவித்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன, ஈஸ்டர் தின தாக்குதலுக்கு பகிரங்க மன்னிப்பும் கோரினார். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். தனது ஆட்சிக் காலத்தில் தனக்கு தெரியாமல் வேறொரு தரப்பினரால் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் அதேபோன்று கத்தோலிக்க மக்களிடம் தாம் மன்னிப்புக் கோருவதாக அறிவித்தார். இந்த விடயத்தில் தான் தவறிழைத்ததாக அர்த்தப்படாது என்றும் ஜனாதிபதி என்ற வகையில் தம்மால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் தவறிழைக்கும் பட்சத்தில் அதற்கு ஒரு ஜனாதிபதியாகப் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு தமக்கு உள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

# மைத்திரியின் மன்னிப்பை திருச்சபை ஏற்காது

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஈஸ்டர்தின தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்து கத்தோலிக்க சமூகத்திடம் கோரிய மன்னிப்பை கத்தோலிக்க திருச்சபை ஏற்றுக்கொள்ளாது என்று சமூக தொடர்புக்கான தேசிய பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிஷாந்த அடிகளார், செவ்வாய்க்கிழமை (31) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நிபோஜனுக்கு அஞ்சலி

க. அகரன்



தெஹிவளையில் ரயில் விபத்தில் மரணமடைந்த ஊடகவியலாளர் எஸ். என். நிபோஜனுக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் 2,171வது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் குறித்த நிகழ்வு நேற்று (31) முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

விண்ணப்பங்களைக் கோருவதால்

# சின்னத் தேர்தலுக்கு ஆபத்து ஏற்படும்



தேர்தல் காலத்தில் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் விண்ணப்பம் கோருவது சட்டவிரோதமானது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட மேயர் வேட்பாளர் முஜிபுர் ரஹ்மான் மற்றும் ஏனைய வேட்பாளர்களுடன் சர்வமதத் தலைவர்களிடமும் செவ்வாய்க்கிழமை (31) ஆசி பெற்று தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்து வைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# அரச செலவினங்களை குறைக்கவும் -ஜனாதிபதி



2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான மாதாந்த செலவினத்தை விட அரசாங்கத்தின் வருமானம் தற்போது மிகவும் குறைவாக இருப்பதால் அரச செலவினங்களை மேலும் குறைக்க வேண்டும் என்று நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார். அரச ஊழியர்களின் சம்பளம், ஓய்வூதியம், நலன்புரி, மருந்துகள், கடன் கொடுப்பனவுகள் தவிர்ந்த, ஏனைய அனைத்துச் செலவுகளையும் தற்போது திறைசேரிக்கு ஏற்பது கடினம் எனவும் ஜனாதிபதி மேலும் சுட்டிக்கா

தொடர்ச்சி P2

இலங்கை தொழிலாளர் காங்கிரஸால்

# இரு கோரிக்கைகள் பிரதமரிடம் முன்வைப்பு



குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் வரி அதிகரிப்பை மறுபரிசீலிக்க வேண்டும் மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,000 ரூபாய் நாள் சம்பளத்தை இரட்டிப்பாக்க வேண்டும் ஆகிய இரண்டு கோரிக்கைகளை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்தது. பிரதமர் தினேஷ் குணவர்தன, தொழிற்சங்கங்களின் தலைவர்களுடன் அலரிமாளிகையில் செவ்வாய்க்கிழமை (31) விசேட கலந்துரையாடலில் ஈடுபட்ட போது, இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் பிரதமரிடம் இரண்டு கோரிக்கைகளை இ.தொ.கா சார்பாக முன்வைத்தார்.

தொடர்ச்சி P2

# சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை திருத்த அனுமதி



சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தை திருத்துவதற்கு அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



வழக்கு பொருட்கள் குறித்த

# சட்டத்தை வலுவாக்க புதிய சட்டமூலம்

வழக்குப் பொருட்கள் முகாமைத்துவம் மற்றும் கையுதிர்த்தல் தொடர்பான சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்கும், அதற்காகப் புதிய சட்டமூலத்தைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# முதன்மை பணவீக்கம் ஜனவரியில் சரிந்தது

**4ஆவது மாதமாக பணவீக்கம் வீழ்ச்சி**



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் முதன்மைப் பணவீக்கம் 2023ஆம் ஆண்டு ஜனவரியில் 54.2 சதவீதமாகக் குறைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு இன்று முதல் விண்ணப்பம் கோரல்

சுயாதீன ஆணைக்குழு உறுப்பினர்களாக செயற்படுவதற்கு பொருத்தமான நபர்களிடமிருந்து அரசியலமைப்பு பேரவையால் இன்று (01) முதல் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 41 (ஆ) பிரிவுக்கு அமைய விண்ணப்பங்களைக் கோரும் விளம்பரங்களை 2023ஆம் ஆண்டு பெப்ரவரி 1ஆம் திகதி பத்திரிகைகளில் வெளியிட அரசியலமைப்பு பேரவை தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2


பயங்கரவாதத் தடைச் சட்ட வழக்கிலிருந்து

# வசந்த முதலிகே விடுதலை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாணவர் சம்மேளனத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவை அந்த வழக்கில் இருந்து கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ், செவ்வாய்க்கிழமை (31) விடுதலை செய்தார்.

தொடர்ச்சி P2



# வருமானத்தை விட இருமடங்கு செலவு

கடன் சேவைக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கிய மாதாந்தச் செலவு, அரசாங்கம் வருமானமாக ஈட்டும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகமாகும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார். ஜனவரி மாதத்தில் இதுவரை 158.7 பில்லியன் ரூபாயை மட்டுமே வரி வருமானமாக அரசாங்கம் பெற்றுள்ளதாகவும் ஜனவரி 27 ஆம் திகதி வரை 367.8 பில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2

ஷாப்டர் மரண விவகாரம்

# இரண்டு குழுக்களை நியமித்தது சீ.ஐ.டி



பிரபல தொழிலதிபரான தினேஷ் ஷாப்டரின் மரணம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கு மேலும் இரண்டு குழுக்களை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சீ.ஐ.டி) நியமித்துள்ளது. ஷாப்டரின் தொலைபேசி பதிவுகளை ஆய்வு செய்வதற்கும் தடயவியல் பகுப்பாய்வு செய்வதற்கும் இரு குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளதுடன்,

தொடர்ச்சி P2

# ஊழல் சுட்டெண்ணில் இலங்கை முன்னேற்றம்

ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் வெளியிட்டுள்ள 2022ஆம் ஊழல் புலனாய்வு சுட்டெண்ணில் இலங்கை முன்னேறியுள்ளது. கடந்த ஆண்டு வெளியான பட்டியலில் 102ஆவது இடத்தில் இருந்த இலங்கை, 2022ஆம் ஆண்டுக்காக இம்முறை வெளியிடப்பட்ட பட்டியலில் 101 ஆவது இடத்தைப் பெற்று 1 இடம் முன்னேறியுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கான ஊழல் புலனாய்வு சுட்டெண்ணின் படி, ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் 180 நாடுகளை மதிப்பீடு செய்துள்ளது. இலங்கைக்கு வழங்கப்பட்ட புள்ளி 37இல் இருந்து 36ஆக குறைந்துள்ள போதிலும், இலங்கை தரவரிசையில் ஓரிடம் முன்னேறியுள்ளதுடன்,

தொடர்ச்சி P2

# 70% சீருடை தேவை சீனாவினால் பூர்த்தி



2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை சீருடை தேவையில் 70 சதவீதம் சீனாவால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த நன்கொடையின் முதலாவது தொகுதி தற்போது நாட்டுக்கு வந்துள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். கொழும்பில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மன்னிக்கவும்

கத்தோலிக்க சமூகம் தன் மீது வெறுப்பு கொள்ளவில்லை என்றும் தனது 15 வயதில் பைபிள் படித்தாகவும் குறிப்பிட்ட அவர், மற்றவர்கள் செய்த தவறால் இன்று இழப்பீடு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் அதிகாரிகள் செய்யும் குற்றங்களுக்கு ஜனாதிபதியும் பொறுப்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தனக்கும் அந்த வழக்குக்கும் உள்ள தொடர்பு அதுவே என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட உள்ளதாக அறிவித்த அவர், தனக்கு எதிரான சதிகளுக்கு அஞ்சப் போவதில்லை என்றும் தான் எதற்கும் பின்வாங்கப் போவதில்லை என்றும் தெரிவித்ததார்.

# அரச செலவினங்களை குறைக்கவும்: ஜனாதிபதி

எனவே, ஏற்கனவே நடைமுறையில் உள்ள வரித் திருத்தங்களின் மூலம் வருமானம் ஈட்டத் திட்டமிடப்பட்டிருக்கும் வருமானங்கள் கிடைக்கும் வரை, அரசாங்க செலவினங்களை மேலும் குறைக்க வேண்டும் அல்லது ஒத்திவைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

திறைசேரியால் முன்னுரிமை அளவுகோல்கள் அமைக்கப்படும் எனவும் அதுவரை சிறு செலவினங்களுக்காக ஒதுக்கப்படும் பணத்தை விடுவிப்பது மட்டுப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அரச நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவது தவிர்க்கப்பட வேண்டும் எனவும், அதனை மீறும் எந்தவொரு அதிகாரியும் தனிப்பட்ட முறையில் செலவுகளுக்கு பொறுப்பேற்க வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

# இரு கோரிக்கைகள் பிரதமரிடம்...

குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் வரி அதிகரிப்பு என்பது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம் என்றும் அதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் இ.தொ.கா சார்பாக முன்மொழிந்தார்.

அரசாங்கத்தை நடத்த வரி என்பது அவசியம். ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பணவீக்கம் அதிகரித்து டொலரின் விலை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. எனவே அந்நியசெலவானியை ஈட்டுக்கொடுக்கும் ஏற்றுமதி சார்ந்த தொழில்களில் ஈடுபடுபவர்களுக்கு வரி அதிகாரிப்பு என்பது ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயம் என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இரண்டாவது கோரிக்கையாக, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் 1000 ரூபாய் நாள் சம்பளம் அவர்களின் முழுமையான ஒரு நாள் உணவுக்கு போதுமானதல்ல என்றும் தேயிலை மற்றும் இரப்பர் ஏற்றுமதி சார்ந்த தொழிலாக இருப்பதால் அந்நியசெலவானி ஊடாக இரட்டிப்பு இலாபம் ஈட்டிக்கொடுக்கிறது. இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக டொலர் விலை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

இதனூடாக பெருந்தோட்ட நிறுவன உரிமையாளர்கள் இரட்டிப்பு இலாபம் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் தோட்ட தொழிலாளர்களின் சம்பளமும் இரட்டிப்பாக அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக்கட்டான காலங்களில் தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இ.தொ.கா.என்றுமே முன் நின்று செயற்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் அதுவே தொடரும் எனவும் செந்தில் தொண்டமான் இந்த கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

# வசந்த முதலிகே...

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வசந்த முதலிகேவுக்கு பொருந்தாது என்றும் சட்டத்தின் விதிகளை தவறாகப் பயன்படுத்துவதற்கான ஆதாரங்களை முறைப்பாட்டாளர் தரப்பு உருவாக்கியுள்ளது என்றும் நீதவான் அறிவித்தார்.

இந்த வழக்கில் இருந்து வசந்த முதலிகே விடுவிக்கப்பட்டாலும் இன்னும் சில வழக்குகளுக்காக அவர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

காலி முகத்திடல் போராட்டம் குறித்து, ஒகஸ்ட் மாதம் 21 பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட வசந்த முதலிகே, 89 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த பின்னர் நவம்பர் 17ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக் கட்டளையின் கீழ் 90 நாட்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டார்.

வசந்த தடுத்து வைக்கப்பட்டமைக்கு எதிராக பல எதிர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அவரை விடுவிக்குமாறு வலியுறுத்தி சட்டமா அதிபரிடம் 12 ஆயிரம் சத்தியக் கடதாசிகள், திங்கட்கிழமை (30) சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இரண்டு குழுக்களை நியமித்தது...

சீ.ஐ.டியின் பிரதிப் பொலிஸ் மா அதிபரின் மேற்பார்வையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பிரபல தொழிலதிபரான தினேஷ் ஷாப்டரின் மரணம், கொலையா அல்லது தற்கொலையா என்பது குறித்து உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் மரணத்துக்கான காரணத்தை கண்டறிய இன்னும் விசாரணை நடந்து வருவதாகவும் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

ஷாப்டரின் மரணம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் (சீ.ஐ.டி) இதுவரை 175 க்கும் மேற்பட்டோரிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ள நிலையில், குறைந்தபட்சம் 14 வழக்கு பொருட்கள் மற்றும் மாதிரிகள் பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பாக விரிவான விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில், சந்தேக நபர்களோ அல்லது மரணத்துக்கான சரியான காரணமோ இதுவரை நேரடியாகக் கண்டறியப்படவில்லை.

52 வயதான ஷாப்டர், கடந்த வருடம் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் நிறுத்தப்பட்டிருந்த அவரது காரின் சாரதி ஆசனத்தில், கழுத்தில் கம்பியினால் கட்டப்பட்ட நிலையில் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வருமானத்தை...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற வாராந்த அமைச்ச ரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக 87.4 பில்லியன் ரூபாயும் ஓய்வூதியம் சமுர்த்தி மற்றும் நலன்புரி கொடுப்பனவுகளுக்கு 29.5 பில்லியன் ரூபாயும் செலவிடப் பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கடன் சேவைக்கான ஒதுக்கீடுகளை உள்ளடக்கிய மாதாந்தச் செலவு, அரசாங்கம் வருமானமாக ஈட்டும் தொகையை விட இரண்டு மடங்கு அதிகமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

எனவே, அரசாங்கம் திறைசேரி பத்திரங்கள், திறைசேரி உண்டியல்கள், மத்திய வங்கியிடமிருந்து தற்காலிக முற்பணங்கள் மற்றும் வங்கிகளில் இருந்து மேலதிக கொடுப்பனவுகள் போன்றவற்றின் ஊடாக நிதியை கோர வேண்டியுள்ளதாக குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் செலவினங்களைக் குறைப்பதற்கு ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைய பல நடவடிக்கைகளை முன்மொழிந்துள்ளதாக தெரிவித்த அவர், வரி அதிகரிப்பு காரணமாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் அரசாங்கம் பாரிய வரி வருமானத்தை எதிர்பார்ப்ப தாக குறிப்பிட்டார்.

எனினும் அரசாங்கம் சம்பளம் வழங்குவதையும் நலன்புரி கொடுப்பனவுகளை வழங்குவதையும் தவிர்க்க முடியாது என்று தெரிவித்த அமைச்சர், இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இல்லை என்றும், பொருளாதார நெருக்கடியை சமாளிக்க அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# ஊழல் சுட்டெண்ணில்...

தாய்லாந்து, துருக்கி மற்றும் செர்பியா போன்ற நாடுகளுடன் இலங்கை ஒரே இடத்தைப் பிடித்துள்ளது அண்மைய ஊழல் புனாய்வு சுட்டெண் தரவரிசையில் பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகியவை இலங்கைக்கு கீழே உள்ள அதே வேளையில் இந்தியா 85ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மைத்திரியின் மன்னிப்பை திருச்சபை ஏற்காது

தனது ஆட்சிக் காலத்தில் தனக்கு தெரியாமல் வேறொரு தரப்பினரால் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், காயமடைந்தவர்கள் அதேபோன்று கத்தோலிக்க மக்களிடம் தாம் மன்னிப்பு கோருவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரி, செவ்வாய் (31) முற்பகல் அறிவித்தார்.

அந்த மன்னிப்பை நிராகரித்து வெளியிட்ட அறிவிப்பிலேயே அருட்தந்தை மேற்குறிப்பிட்ட விடயத்தை தெரிவித்தார்.

கத்தோலிக்க சமூகம் தன் மீது வெறுப்பு கொள்ளவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரி தெரிவித்திருந்த நிலையில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை திருத்த அனுமதி

அரசாங்க தகவல் திணைக்களத்தில் செவ்வாய்க்கிழமை (31) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரிச் சட்டத்தின் கீழ், வருடாந்தம் 120 மில்லியனுக்கும் அதிகமான வருமானம் ஈட்டும் நபர்கள் மீது 2.5 வீத சமூக பாதுகாப்பு வரி விதிக்கப்படுகின்றது.

சில ஏற்றுமதியாளர்கள் மற்றும் மிகச் சிறிய இலாபத்தில் அந்நிய செலாவணி ஈடுபடுபவர்கள், 2.5 வீத வரித் தொகையை செலுத்தினால், அவர்களால் தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து செல்ல முடியாது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட யோசனை மூலம் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்திகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தி வரிக்கு உள்ளாகின்ற மோட்டார் வாகனங்கள் மற்றும் விசேட தேவையுடையவர்களின் பாவனைக்கான உபகரணங்கள் சமூகப் பாதுகாப்பு அறவீட்டிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த சட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் சில தற்போது கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த சட்டத்தைத் திருத்தம் செய்வதற்கும், அதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

# முதன்மைப் பணவீக்கம்...

2022ஆம் டிசெம்பரில் 57.2 சதவீதமாகக் இருந்த நிலையில், 2023 ஜனவரியில் 54.2 சதவீதமாகக் குறைந்துள்ள நிலையில் 2022 செப்டம்பர் முதல் 4 ஆவது மாதமாக பணவீக்கம் குறைந்துள்ளது.

2022 டிசெம்பரில் 64.4 சதவீதமாக இருந்த உணவுப் பணவீக்கம் 2023 ஜனவரியில் 60.1 சதவீதமாகக் குறைந்துள்ளதுடன், டிசெம்பரில் 53.4 சதவீதத்திலிருந்த உணவு அல்லாத வகையின் பணவீக்கம் 51.0 சதவீதமாகக் குறைந்துள்ளது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டினதும் அடிப்படையிலமைந்த ஆண்டுக்கு ஆண்டு முதன்மை மற்றும் மையப் பணவீக்கமானது எதிர்பார்க்கப்பட்ட வாறு தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக 2022 டிசெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமை குறிப்பிடத்தக்கது.




# நிபோஜனுக்கு அஞ்சலி

இதன்போது அன்னாரின் உருவப்படத்திற்கு தீபமேற்றியும் பூக்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

கிளிநொச்சி ஊடகவியலாளர் எஸ். என். நிபோஜன், தெஹிவளையில் 30/01/2023 இடம்பெற்ற புகையிரத விபத்தில் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# சின்னத் தேர்தலுக்கு ஆபத்து ஏற்படும்

அரசியலமைப்புச் சபையின் நடவடிக்கையானது அரசியலமைப்பை மீறும் செயலாகும் என்பதால், சாத்தியமுள்ள உறுப்பினர்களிடமிருந்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பங்களை கோருவதற்கு ஆட்சேபனை தெரிவிப்பதாக குறிப்பிட்டார்.

ஏனைய ஆணைக்குழுக்களுக்கு இவ்வாறான விண்ணப்பங்கள் கோரப்பட்டாலும், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அவ்வாறான விண்ணப்பங்கள் கோரப்படுவதை அனுமதிக்க முடியாது என்றார்.

# சட்டத்தை வலுவாக்க புதிய சட்டமூலம்



வழக்குப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் கையுதிர்த்தல் தொடர்பாகக் காணப்படுகின்ற சட்ட ஏற்பாடுகள் போதுமானதாக இன்மையால் துரிதமாகக் கையுதிர்க்கப்பட வேண்டிய ஒருசில பொருட்களை பேணி வைத்திருப்பதற்கு நேரிட்டுள்ளது.

இதனால் பொருளாதார ரீதியாகப் பாதிப்புக்கள் ஏற்படுவதுடன், அங்ஙனம் ஒருசில பொருட்கள் பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத நிலைமை தோன்றுவதால் பிரச்சினைகள் மேலெழுந்துள்ளன.

அதனால், வழக்கு விசாரணை முடிவுறும் வரைக்கும் நீதிமன்றத்தின் காப்பிலுள்ள வழக்குப் பொருட்களைக் கையுதிர்ப்பதற்கு ஏற்புடைய சட்ட ஏற்பாடுகள் மற்றும் குறித்த நடவடிக்கை முறைகள் உள்ளடங்கிய புதிய கொள்கை மற்றும் சட்ட வரையறையைப் பரிந்தரைப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் பரிந்துரைகளுக்கமைய சட்டத்தை வலுவாக்கம் செய்வதற்கும், அதற்காகப் புதிய சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# சுயாதீன...

பெப்ரவரி 1ஆம் திகதி முதல் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் 15ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு, கொள்வனவு ஆணைக்குழு, தேசிய கணக்காய்வு ஆணைக்குழு மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

# 70% சீருடை தேவை சீனாவினால் பூர்த்தி

பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதுடன் கல்வியின் தரமும் மேம்படுத்தப்பட வேண்டும் என்றும் இதற்கான நடைமுறை திட்டங்களை அறிமுகப்படுத்தி மாணவர்களிடம் ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளை புகுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, பாடசாலை போஷாக்கு திட்டத்தின் கீழ் உணவு வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய அனைத்து நிலுவைத் தொகைகளையும் செலுத்தியுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனவரி 31 ஆம் திகதி முதல் மாகாண கணக்குகளில் செலுத்தப்பட்டு வருவதாகவும் வலயக் கல்வி அலுவலகங்கள் ஏற்கனவே உணவு வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை செலுத்தி வருவதாகவும் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# உடைந்த மதிலை மீளமைக்குமாறு கோரிக்கை

■ என்.ஆராச்சி



புளத்கொஹுபிட்டிய- கேகாலை (A-12) வீதியின் கபகமுவ பிரதேசத்தின் ஹொர ஹேன பகுதியில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த மதில் உடைந்து விழுந்துள்ளமையால் குறித்த வீதியூடாக பயணிக்கும் வாகனங்கள் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மதில் உடைந்து பல நாட்கள் கடந்துள்ள நிலையிலும் அதனை மீளமைக்க அதிகாரிகள் எவரும் முன்வரவில்லை என்றும் தெரிவிக்கின்றனர்.

குறித்த இடத்தில் தற்போது வரை அதிக விபத்துகள் பதிவாகியுள்ளதாகவும் எனவே எதிர்காலத்தில் பாரிய விபத்தொன்று ஏற்படுவதற்கு முன்னர் இந்த மதிலை அமைத்து தருமாறு வேண்டுகோள் விடுக்கின்றனர்.

ஹட்டனில்

# கட்டாக்காலி நாய்களால் அசௌகரியம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா



ஹட்டனில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துள்ளதென பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த கட்டாக்காலி நாய்கள் ஹட்டன் பிரதேசத்தின் அனைத்து பகுதிகளிலும் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் பலரும் அசௌகரியத்துக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கூட்டம் கூட்டமாக கட்டாக்காலி நாய்கள் சுற்றித் திரிவதாகவும் வீதியில் நடந்து செல்பவர்களும் நாய் கடிக்கு உள்ளாவதாகவும் எனவே, ஹட்டனில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தைக் குறைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய

# தேர்த்திருவிழா தொடர்பில் தீர்மானம்

■ மஹேஸ் கீர்த்திரத்ன



மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர் திருவிழா மார்ச் மாதம் 06ஆம் திகதி வெகு விமரிசையாக நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான கலந்துரையாடலானது, மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் நாலக பண்டார கோட்டேகொட மற்றும் மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன ஆகியோர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே, இது குறித்து கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் கொவிட் தொற்றால் இதில் பங்கேற்கும் பக்தர்களின் எண்ணிக்கையில் மட்டுபாடுகள் விதிக்கப்பட்டதுடன், இம்முறை எவ்வித கட்டுபாடுகளுமின்றி தேர்த்திருவிழாவை விமர்சையாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா மார்ச் மாதம் 9ஆம் திகதி வரை நடாத்தப்படவுள்ளதுடன், மார்ச் மாதம் 6ஆம் திகதி தேர்த்திருவிழாவுடன் 8ஆம் திகதி நீர்வெட்டுடன் திருவிழா நிறைவடையவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாத்தளை மாவட்ட செயலாளர் தேஜானி திலகரத்ன, மேலதிக மாவட்ட செயலாளர்களான நிஷாந்த கருணாதிலக்க, முத்துமாரி அம்மன் ஆலய ஆட்சி மன்ற சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# வாழ வைத்த வாகனத்தை வணங்கி விடைபெற்ற 'ரத்தினம்'

■ ரஞ்சித் ராஜபக்ஷ



அம்பகமுவ, மஸ்கெலியா, நோர்வூட் ஆகிய பிரதேச சபைகளில் 39 வருடங்களாக குப்பை சேகரிக்கும் உழவு இயந்திரத்தின் சாரதியாக கடமையாற்றிய கனகரட்ணம் என்பவர், தனது உழவு இயந்திரத்தை வணங்கி அதன் சாவியை நோர்வூட் பிரதேச சபையின் செயலாளரிடம் கையளித்தார்.

நோர்வூட்- பொகவந்தலாவை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட, மூன்று பிள்ளைகளின் தந்தையான குறித்த சாரதி, அம்பகமுவ பிரதேச சபையில் 39 வருடங்களாக உழவு இயந்திர சாரதியாக கடமையாற்றி வருகின்றார். மஸ்கெலியா மற்றும் நோர்வூட் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டதன் பின்னர், மஸ்கெலியா பிரதேச சபையில் சிறிது காலமும் நோர்வூட் பிரதேச சபையில் சில காலமும் உழவு இயந்திர சாரதியாக பணிபுரிந்து தற்போது ஓய்வுபெறுகிறார். உழவு இயந்திர சாரதியாக 39 வருடங்களாக கடமையாற்றிய இவர் இதுவரை வாகன விபத்தையோ, போக்குவரத்து விதிகளை மீறிய குற்றச்சாட்டுகளையோ எதிர்கொள்ளாதவர் என தெரியவந்துள்ளது.

நகரக் குரங்குகள்

# தோட்டத்தில் அட்டகாசம்

## றொட்டிகளையும் விட்டுவைக்கவில்லை

■ துவாரகஷான்





அக்கரப்பத்தனை பிரதான நகரத்தில் உள்ள குரங்குகள் ஆக்ரோவா தோட்ட குடியிருப்பு பகுதிக்கு வருவதால் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு வரும் குரங்குகள் வீடுகளில் வைக்கப்பட்டுள்ள உணவு பண்டங்களை உண்பதுடன், விவசாய பயிர்கள் அனைத்தையும் நாசப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.


மேலும் குடியிருப்பு பகுதியில் கூரைகள் மீது குரங்குகள் தாவி அங்கும் இங்கும் ஓடி திரிவதால், கூரைத்தகடுகள் சேதமாவதாகவும் வீடுகளில் தனியாக சிறு பிள்ளைகளை விட்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

மின்சார கம்பங்களில் குரங்குகள் தொங்கி விளையாடுவதால் மின் இணைப்பும் இடைக்கிடையே துண்டிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ள மக்கள், பொதுமக்களின் நலன் கருதி, குரங்குகளைக் கட்டுப்படுத்த வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தோட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அங்குரார்ப்பண நிகழ்வு..







ஹட்டனில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஜப்பான் மற்றும் கொரிய மொழிகளுக்கான பயிற்சி வகுப்புகளுக்கான ஹட்டன் குளோபல் ஸ்கில்ஸ் நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு ஸ்ரீ கிருஸ்ணபவான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. சர்வமத தலைவர்களின் ஆசியுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் முகாமைத்துவ நிர்வாகியும் ஹட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியின் அதிபருமான எஸ். விஜேசிங், முகாமைத்துவ பணிப்பாளர் எஸ்.ஆர்.ஆர் ருவன் பத்திரன மற்றும் அனுர சோமரட்ண ஆகியோர் கலந்துக்கொண்டனர். (பி. கேதீஸ்)

# மரக்கறிகளின் சில்லறை விற்பனை விலை அதிகரிப்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ



உள்ளூர் சந்தையில் மரக்கறிகளின் மொத்த விலை கணிசமான அளவு வீழ்ச்சியடைந்துள்ள போதிலும், மொத்த விற்பனை நிலையங்களில் இருந்து மரக்கறிகளை கொண்டு சென்று சில்லறை விலைக்கு விற்பனை செய்யும் போது குறைந்த விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென, ஹட்டன் பிரதேச மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தம்புள்ளை மற்றும் கெப்பட்டிபொல ஆகிய பொருளாதார மையங்களில் இருந்து மரக்கறிகளை கொண்டு செல்வதற்கு அதிக பணம் செலவாகும் என்பதுடன், இவ்வாறு மரக்கறிகளை கொண்டு சென்று தமது வர்த்தக நிலையங்களில் இறக்கும் போது இறக்குபவர்களுக்கு அதிகம் பணம் செலுத்த வேண்டி ஏற்படுவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதனால் குறைந்த சில்லறை விலையில் நுகர்வோருக்கு விற்க முடியாதிருப்பதாகத் தெரிவிக்கின்றனர்.



# அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன...

நானுஓயா– வங்கி ஓயா மேல்பிரிவு தோட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அப்பியாச கொப்பிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த தோட்டத்தில் தொழிலாளியாகி பணிபுரிந்த காளிமுத்து காந்தரூபன் என்பவரால் இந்த இலவச அப்பியாச கொப்பிகள் வழங்கிவைக்கப்பட்டன. (ஆ.ரமேஸ்)

# மஸ்கெலியா

## பொகவந்தலாவைப் பகுதியில் சுற்றுலாத்துறை மேம்படுத்தப்படும்

## கே.கே.பியதாஸ தெரிவிப்பு

■ சுதத்.எச்.எம்.ஹேவா



மஸ்கெலியா தொகுதியில் சுற்றுலா வர்த்தகத்தை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் பொகவந்தலாவை தொடக்கம் நல்லத்தண்ணி வரை கேபிள் கார் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் மஸ்கெலியா தொகுதி பிரதம அமைப்பாளர் கே. கே. பியதாச தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி சார்பில் மஸ்கெலியா தொகுதியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நுவரெலியா மாவட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பொகவந்தலாவை பிரதேசத்தை மையமாகக் கொண்டு, கோல்ப் மைதானத்தை உருவாக்கவும், தற்போது நிறுத்தப்பட்டுள்ள ஹட்டன் பொகவந்தலாவை வீதியின் புனரமைப்புப் பணிகளை மீள ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது ஹட்டன் பிரதேசத்தில் சேகரிக்கப்படும் குப்பைகளை அகற்றுவதற்கு உரிய இடமில்லாதது பெரும் பிரச்சினையாக உள்ளது என தெரிவித்த அவர், குறித்த குப்பைகளை அகற்றுவதற்கு பொருத்தமான காணியை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# வெல்லவாயவில் கைக்குண்டு மீட்பு



■ சுமணசிறி குணதிலக

ஹந்தபானாகல பிரதேச வைத்தியசாலைக்கு அருகிலுள்ள முட்புதரிலிருந்து ஆர்.பி.ஜி கைக்குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் (30) மாலை இந்தக் கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

மேய்ச்சல் மாடுகளை குறித்த பகுதிக்கு கொண்டு சென்ற நபர் ஒருவர் வழங்கிய தகவலுக்கமைய இக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட படையினரால் குண்டு செயலிழக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டதாக வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.


**அரசியலமைப்பின் 41ஆ உறுப்புரையின் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 41ஆ உறுப்புரைக்கான அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட பின்வரும் ஆணைக்குழுக்களுக்களின் உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்காக, தேவையான தகைமைகளைப் பெற்றிருக்கும் தனியாட்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தேர்தல் ஆணைக்குழு
2. அரசாங்க சேவை ஆணைக்குழு
3. தேசிய பொலிஸ் ஆணைக்குழு
4. கணக்காய்வு சேவை ஆணைக்குழு
5. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
6. இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சார்த்துரைகளைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு
7. நிதி ஆணைக்குழு
8. எல்லை நிர்ணய ஆணைக்குழு
9. தேசிய பெறுகை ஆணைக்குழு

www.parliament.lk என்னும் பாராளுமன்ற இணையத்தளத்தில் கிடைக்கப்பெறும் மாதிரிக்கு இணங்க தயாரிக்கப்பட்டு முறையாக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2023 பெப்ரவரி 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்,

**அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்**
**இலங்கை பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,**

என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது constitutionalcouncial@parliament.lk என்னும் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் / மின்னஞ்சலாயின் விடயமாக 'ஆணைக்குழுக்களுக்கான உறுப்பினர்களின் நியமனம்' என குறிப்பிடப்படுதல் வேண்டும். ஒவ்வொரு ஆணைக்குழுவுக்கும் தேவையான தகைமைகள் பாராளுமன்ற இணையத்தளத்தில் மாதிரி விண்ணப்பத்துடன் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.
அரசியலமைப்புப் பேரவைக்கான பதில் செயலாளர் நாயகம்

**இலங்கை பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,**
**2023.02.01**

# மட்டு. மாவட்டத்தில் பாரிய கடல் கொந்தளிப்பு

## மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாக ஸ்தம்பிதம்

■ வா. கிருஸ்ணா, ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து நிலவி வரும் சீரற்ற வானிலை காரணமாக, பாரியளவில் கடற்கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்கள் எவரும் கடலுக்குச் செல்லாமை காரணமாக, மீன்பிடி நடவடிக்கைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிக்கின்றனர்.

புதிய காத்தான்குடி, ஏத்துக்கால், பூநொச்சிமுனை, நாவலடி, புன்னக்குடா உட்பட பல கரையோர பிரதேசங்களில் மீன்பிடி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் கடற்றொழிலாளர்கள் தமது படகுகள் உட்பட மீன்பிடி உபகரணங்களை கரையிலிருந்து தூர இடங்களில் நிறுத்தியுள்ளதுடன் மீன் விற்பனை நிலையங்கள், மீன் வாடிகள் என்பனவும் மூடப்பட்டுள்ளன.

இதேவேளை, மட்டக்களப்பு, முகத்துவாரம் கடற்பரப்பில் படகு கவிழ்ந்ததில் மீன்பிடிச்சென்ற ஒருவர் காணாமல்போயுள்ள நிலையில், இருவர் உயிர்தப்பியுள்ளனர்.

சீரற்ற வானிலை காரணமாக, கடல் கொந்தளிப்பாக காணப்படுகின்ற நிலையில், மீன்பிடி திணைக்களத்தால் கடலுக்கு செல்லவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையிலும், குடும்ப வறுமை காரணமாக, நேற்று முன்தினம் (30) இரவு முகத்துவாரத்தில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றவர்களின் படகே இவ்வாறு கவிழ்ந்துள்ளது.

காணாமல்போனவர் திராய்மடு பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான இருதயநாதன் அந்தோனி (41வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடல் சீற்றமாக உள்ளதனால் கடலுக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு வானிலை அவமான நிலையமும் மீன்பிடி திணைக்களமும் தொடர்ந்து அறிவுறுத்தல் வழங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பெரியநீலாவணையில்

# இரத்ததானம், இலவச மருத்துவ முகாம்



■ ஏ.எல்.எம் ஷினாஸ்

பெரியநீலாவணை பொலிஸ் நிலையம், பொலிஸ் நிலைய ஆலோசனை குழு என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் இலவச மருத்துவ பரிசோதனை, மரம் நடுகை, சிரமதானம் ஆகிய நிகழ்வுகள் நேற்று (31) பெரியநீலாவணை தொடர்மாடி வீட்டு திட்டத்தில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜி துசார திலங்க ஜெயலால் தலைமையில் நடைபெற்றன.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி ஜெயந்த ரத்நாயக்க கலந்து கொண்டிருந்தார்.

நிகழ்வில், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜெ அதிசயராஜ், பெரியநீலாவணை வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் சசி யாப்பா, கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி டொக்டர் திருமதி சிபாயா தாஜுதீன், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.டி.சி.எஸ் ரத்நாயக்க உட்பட வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொலிஸ் நிலைய அதிகாரிகள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.



## இரண்டு சிறுநீரகங்களையும் இழந்த தாய்க்கு நிதி உதவி

■ வி.ரி சகாதேவராஜா

இரண்டு சிறுநீகங்களையும் இழந்த தாய்க்கான மாதாந்த கொடுப்பனவை மட்டக்களப்பு ரோட்டரிக் கழகம் வழங்கி வருகிறது. ரோட்டரி கழக தலைவர் ரோட்டேரியன் பு. ரமணன், அந்த நிதி உதவியை நேற்று முன்தினம் (30) வழங்கி வைத்தார்.

இதேவேளை, மண்டூர் ,தம்பலவத்தை பகுதியில் இரண்டு கால்களையும் இழந்தவருக்கு சக்கர கதிரையையும் வழங்கி வைத்தார்.

திருகோணமலை மாவட்டத்தில்

# முதலிடம்



2022ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்ப டையில், திருகோ ணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி அனோஸ்கா முரளிதரன் 183 புள்ளிகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

இக்கல்லூரியில் இருந்து பரீட்சைக்கு தோற்றிய 148 மாணவர்களில் வெட்டுப் புள்ளிக்கு மேல் 55 மாணவர்களும் (37.16%), 100 புள்ளிகளுக்கு மேல் 123 மாணவர்களும் (83.11%), 70 புள்ளிகளுக்குமேல் 140 மாணவர்களும் (94.59%) பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கல்முனை ஆதார வைத்தியசாலையில்

# கௌரவிப்பு

■ வி.ரி சகாதேவராஜா

2020ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தி திறன் விருது இரண்டாம் இடம் பெற்றமையை முன்னிட்டு, கல்முனை ஆதார வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் நேற்று முன்தினம் (30) கௌரவிக்கப்பட்டனர்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி பணிப்பாளர் டொக்டர் ஜே. மதன் , வைத்தியசாலை கணக்காளர் எம். கேந்திரமூர்த்தி, தாதியபரிபாலகர்கள் திருமதி சுஜேந்திரன், சசிதரன், நிர்வாக உத்தியோகத்தர் ரி. தேவஅருள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



கருமலையூற்று மு. வி. மாணவர்கள்

# சாதனை

■ ஒலுமுதீன் கியாஸ்

திருகோணமலை, கருமலை ஊற்று முஸ்லிம் வித்தியாலயத்தில் 2002 ஆம் ஆண்டு ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் இரண்டு மாணவர்கள் சித்தியடைந்து சாதனை படைத்துள்ளனர்.

150 புள்ளிகளை பெற்ற அனஸ் அம்னத் ஹானியா, 142 புள்ளிகளை பெற்ற நுஸ்ரத் ஹம்தான் அஹமட் ஆகிய மாணவர்களே இந்தச் சாதனையை நிலைநாட்டி உள்ளனர்.

இது குறித்து பாடசாலை அதிபர் கே. எம். எம். நவாஸ் கருத்து தெரிவிக்கையில், இந்தப் பாடசாலையின் வரலாற்றில் முதல் தடவையாக வெட்டுப் புள்ளிக்கு மேல் சித்தியடைந்து, இரு மாணவர்களும் பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர் என்றார்.

# பெரும்போக நெல்லுக்கு உத்தரவாத விலை

## இன்மையால் விவசாயிகள் பெரும் நட்டம்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

அம்பாறை மாவட்ட விவசாயிகளிடம் இருந்து பெரும்போக நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யுமாறு, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக, அம்பாறை மாவட்ட திட்டமட்டத்திலான விவசாய அமைப்பின் செயலாளர் ஏ.எல். எம்.என் அஹமட் நேற்று (31) தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ள நிலையில், விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்ய அரசாங்கம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லையென தெரிவித்தார்.

மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# தனிநபர் உணவு தவிர்ப்பு போராட்டம்

■ நடராசா கிருஸ்ணகுமார்




கிளிநொச்சி, அக்கராயன் மேற்கில் உணவுடன் கூடிய மது விற்பனை நிலையத்தைத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, முருகையா இராசலிங்கம் என்ற தனிநபர் உணவுத் தவிர்ப்பு போராட்டத்தை நேற்று (31) நண்பகல் 12.00 மணியளவில் தொடங்கி உள்ளார்.

அக்கராயன் மேற்கு, இம்மர் நகர்ப் பகுதியில் உணவுடன் கூடிய மது விற்பனை நிலையம் திறப்பதற்கு, இப்பகுதி பொது அமைப்புகள் எழுத்து மூலமாக எதிர்ப்பைத் தெரிவித்து மனுக்கள், கிளிநொச்சி மாவட்டச் செயலாளர், கரைச்சி பிரதேச செயலாளர் உட்பட பல்வேறு தரப்பினருக்கும் கையளித்த நிலையில், கடந்த 29ஆம் திகதி ஆரோக்கியபுரம் கிராமத்தில், ஒன்று கூடிய பொது அமைப்புகள் குறித்த மது விற்பனை நிலையம் திறக்கக் கூடாது என்ற தீர்மானத்தை எடுத்திருந்த நிலையில், தனிநபர் ஒருவர் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், பொது மண்டபங்கள், முன்பள்ளிகள் என மக்கள் செறிந்து வாழும் பகுதியில், உணவுடன் கூடிய மது விற்பனை நிலையம் வேண்டாம் என உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர் தெரிவித்துள்ளார்.



முல்லைத்தீவுக்கு

## பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் நியமனம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக சிவபாதசுந்தரம் விகிர்தன், மாங்குளத்தில் உள்ள தனது அலுவலகத்தில் பணிகளை பொறுப்பேற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வழுக்கையாற்றுத் திட்டத்தின் 2008, 2009 காலப்பகுதியில் நீர்ப்பாசனப் பொறியியலாளராக பணியாற்றிய இவர், பின்பு கிளிநொச்சி நீர்ப்பாசனப் பொறியியலாளராகவும் வடமாகாண கல்வி அமைச்சின் பாடசாலை வேலைகளுக்கான பொறியியலாளராகவும் முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பணிமனையில் நீர்ப்பாசனப் பொறியியலாளராகவும் பணியாற்றினார்.

வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தில் சிரேஷ்ட நீர்ப்பாசனப் பொறியியலாளராக பணியாற்றிய நிலையில், தற்போது முல்லைத்தீவு மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளராக தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார்.

கிளிநொச்சியில் தொடர்மழை:

# விவசாயிகள் அவதி



■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று (31) அதிகாலை முதல் பெய்து வரும் தொடர்மழையால், அறுவடைசெய்த நெல்லை உலர வைக்கமுடியாது விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிளிநொச்சியில் நேற்றிரவு முதல் பெய்யும் பெரு மழையால், அறுவடை செய்த நெல்லை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியாமலும் உலர வைக்க முடியாத நிலையிலும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

காலபோக நெற் செய்கை அறுவடைகள் ஆரம்பித்துள்ள நிலையில், அறுவடை செய்யும் நெல்லை, விவசாயிகள் உரிய விலையில் சந்தைப்படுத்த முடியாமலும் நெல் உலர விடும் தளங்கள் போதியளவு இல்லாத நிலையிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் நெல்லை உலர வைத்து வருகின்றனர்

அத்துடன், தொடர் மழையால் அறுவடைக்கு தயாராக இருந்த நெல் வயல்களிலும் வெள்ள நீர் காணப்படுகின்றது.

மன்னாரில் இராணுவத்தினரால் நிறுத்தப்பட்ட

# சிறு கடற்றொழிலுக்கு மீண்டும் அனுமதி



■ எஸ். றொசேரியன் லெம்பேட்

மன்னார்-யாழ். பிரதான வீதி, தள்ளாடி 14 கண் பாலத்தடியில் வாழ்வாதாரத்துக்காக நீண்ட காலமாக சிறு கடல் தொழில் செய்யும் மீனவர்களை, இராணுவம் அப்பகுதியில் தொழில் செய்ய அனுமதிக்காததன் காரணமாக, அப்பகுதி மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருந்தனர்.


பாதிக்கப்பட்ட மீனவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாதனின் கவனத்துக்கு தமது வாழ்வாதார இழப்புக் குறித்து, தெரிவித்ததையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர் குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் (30) விஜயம் செய்து மீனவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்ததுடன் வன்னி இராணுவ தலைமையகத்துடன் தொடர்பு கொண்டு இப்பிரச்சினை தொடர்பாகத் தெரியப்படுத்தினார்.

**“ பாதிக்கப்பட்ட மீனவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலாதனின் கவனத்துக்கு தமது வாழ்வாதார இழப்புக் குறித்து, தெரிவித்ததையடுத்து, பாராளுமன்ற உறுப்பினர், மீனவர்களின் நிலைமை தொடர்பாக ஆராய்ந்தார். தள்ளாடி இராணுவ பொறுப்பு அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடியதன் பிரகாரம், மீனவர்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் சிறு கடல் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர்**

உடனடியாக தள்ளாடி இராணுவ பொறுப்பு அதிகாரி சம்பவ இடத்துக்கு வருகை தந்து பாராளுமன்ற உறுப்பினருடன் கலந்துரையாடியதன் பிரகாரம், பாராளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோளுக்கு அமைவாக, மீனவர்கள் தொடர்ந்தும் அப்பகுதியில் சிறு கடல் தொழில் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

ஊடகவியலாளர் நிபோஜனுக்கு

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் அஞ்சலி




■ க. அகரன்

ஊடகவியலாளர் எஸ். என் நிபோஜனுக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று (31) அஞ்சலி செலுத்தப்பட்டது.

வடக்கு, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் 2,171ஆவது நாளாக தொடர் போராட்டத்தில் ஈடுபடும் வவுனியா பிரதான தபாலகத்துக்கு அருகாமையில் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, அன்னாரின் உருவப்படத்துக்கு தீபமேற்றியும் பூக்கள் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது. ஊடகவியலாளர் எஸ். என். நிபோஜன் நேற்று முன்தினம் (30) தெஹிவளையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் மரணமடைந்திருந்தார்.

# செலுத்தும் வரிக்கேற்ப வினைத்திறனான சேவைகள் கிடைக்குமா?

ஊதியத்துக்கு ஏற்ப செலுத்தும் வரி, இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் நடைமுறையிலிருந்த வரி அறவீடுகளில், மிகவும் உயர்ந்த சதவீதமான 36 சதவீதம் வரையான வரி அறவீடு தற்போது அமல்படுத்தப்பட்டுள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளில் வருமானவரி அறவீட்டு முறை நடைமுறையில் உள்ளதுடன், அந்த வரியைப் பயன்படுத்தி அந்நாடுகளில் குடிமக்களுக்கு உயர்ந்த வினைத்திறனான சேவைகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் அரச துறைசார் எந்தச் சேவையை பெற்றுக் கொள்ளச் சென்றாலும், நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலை; ஒரு நாள் பொழுதை செலவிட வேண்டிய நிலை போன்ற பல இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மன உளைச்சல், அதிகாரிகளின் எரிச்சலூட்டும் செயற்பாடுகள், பாகுபாடுகள், அதிகாரப்போக்குடனான சேவை என வரி செலுத்துவோருக்கு எவ்விதமான நட்புணர்வையும் ஏற்படுத்தாத வகையிலேயே, அரச அதிகாரிகளால் சேவைகள் வழங்கப்படுகின்றன.

இலவசமாக வழங்கப்படும் கல்வி, சுகாதார வசதிகள் போன்றவற்றின் வினைத்திறனும் அண்மைக் காலங்களில் பெரிதும் திருப்பியற்றவகையில் அமைந்துள்ளன. குறிப்பாக, நாட்டில் நிலவும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு, இதில் பெரிதும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உயர்ந்த தொகை வரி செலுத்துபவருக்கென எந்தவொரு விசேட சலுகைகளும் அரசாங்கத்தால் வழங்கப்படுவதில்லை. வரி செலுத்துவோரை ஊக்குவிக்கும் வகையில், எவ்விதமான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

இந்த வரி அறவீட்டின் போது, சம்பந்தப்பட்ட நபர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை. உதாரணமாக, கடந்த வாரம் மாதாந்தம் ரூ. 200,000 சம்பளமாக பெறும் ஒருவர், தமது கடன்கள், வரிகள், அறவீடுகள் நீங்கலாக, ரூ. 14,000 ஐ பெற்றுக் கொண்டதாகவும், வாழ்க்கைச் செலவை எவ்வாறு சமாளிப்பது என்பதாக சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்தார்.

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி வசதியைப் பெற்றுக் கொள்வதற்கு, அந்த நிதியத்தால் விதிக்கப்பட்டிருந்த சில நிபந்தனைகளில், அரச வருமானத்தை அதிகரிப்பது என்பதற்கமைய இந்த வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை, வாகனப் பதிவு மாற்றம், பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ் பதிவு, சோலை வரி செலுத்தல், கட்டட நிர்மாண அனுமதி பெறல், நீர், மின்சார பிரச்சினைகள், பெயர் மாற்றங்கள், பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளைப் பதிவு செய்தல் போன்ற சகல செயற்பாடுகளின் போதும், வரி செலுத்தும் மக்கள் பெரும்பாலும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது.

இந்நிலை மாறுமா? உயர்ந்தளவு வரி செலுத்துநர்களின் நலனில் அக்கறை காண்பித்து, நட்பான சேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா? அசமந்தமாக நடந்து கொள்ளும் அதிகாரிகளை தட்டிக் கேட்க மேலதிகாரிகள் முன்வருவார்களா?




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பிரதி உபகாரங்களை எதிர்பாராதவர்கள் ஆசைகள் அற்றவர்கள்; பிறருக்கு உதவுவதில் பரந்த மனம் உள்ளவர்களாக இருப்பார்கள். தாங்கள் கொடுத்ததை விளம்பரம் செய்யாதவர்கள், உண்மையான கொடையாளிகள்.

ஏழைகளுக்கு வலிந்து உதவிகளைச் செய்தாலும் அதை ஏற்றவர்கள், பின்னர் அவர்களை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. சகல மக்களின் உழைப்பினால்த்தான் உலகம் வாழ்கின்றது. ஆனால், இன்னமும் ஏழை மக்களுக்கு உதவுபவர்கள் குறைந்தவர்களாகவே இருக்கிறார்கள். மனிதர் ஒருவரில் ஒருவர் சார்ந்து வாழ்வது இயற்கையானது.

தனித்து இயங்க முடியாது. எனவே, சகலரையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் உருவாக வேண்டும். எல்லோருக்கும் எல்லாமும் கிட்டாது; இல்லாதவன் பெறுமதி அற்றவன் இல்லை. வாழ்க்கைச் சுழற்சி சாதாரணமானது. இதனை எவரும் முழுமையாக உணர்கின்றார்களா? அறிந்தும் அறியாதவர்கள் போல, வாழ்கின்றவர்களே அநேகமானவர்களாக இருக்கின்றார்கள். யதார்த்த உண்மையை உணர்க.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

### பொருளாதார நெருக்கடியை

# இனப்பிரச்சினையால் மூடிமறைத்தல்



எம்.எஸ்.எம் ஐயூப்

இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விதித்த காலக்கெடு இன்னும் மூன்று நாள்களில் முடிந்து விடும். அதற்கு, தமிழ்க் கட்சிகள் விதித்த காலக்கெடு நேற்றுடன் (31) முடிவடைந்தது.

ஆனால், இனப்பிரச்சினை தீரவில்லை. மாறாக, அரசியல்வாதிகள் இனப்பிரச்சினையை தமது அரசியலுக்காக பாவிக்கிறார்கள் என்பது இந்தக் காலக்கெடுக்களால் மீண்டும் நிரூபிக்கப்பட்டது.

எதிர்வரும் நான்காம் திகதி நடைபெறவிருக்கும் 75ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப்பிரச்சினையை தீர்ப்பதாக, ஜனாதிபதி கடந்த நவம்பர் மாதம் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது கூறினார். அவ்விவாதம் முடிவடைந்ததன் பின்னர், இப்பிரச்சினையைப் பற்றி பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் அவர் அப்போது கூறினார்.

அதன்படி டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி அவர் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல கட்சிகளையும் பேச்சுவார்ததைக்கு அழைத்தார். சில கட்சிகள் அதில் கலந்து கொள்ளவில்லை. அக்கூட்டத்தின் போது தமிழ் கட்சிகள் மூன்று பிரதான கோரிக்கைகளை முன்வைத்து, அவற்றை ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தீர்க்குமாறு கூறின. ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டார். தீர்வைத் தேடி ஜனவரி மாதத்தில் தொடர்சியாக பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் வாக்குறுதியளித்தார்.

பின்னர், அவர் ஜனவரி ஐந்தாம் திகதி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஜனவரி 10ஆம் திகதி முதல் தொடர்ச்சியாக இனப்பிரச்சினையைப் பற்றி சகல கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்துவாக அப்போது அவர் கூறினார். எனினும் தமிழ்க் கட்சிகள் அப்போதே இது வெறும் ஏமாற்றுவேலை என்பதை உணர்ந்து கொண்டனர்.

உடனடியாகத் தீர்ப்பதாக ஜனாதிபதி ஏற்கெனவே அளித்த வாக்குறுதிகள் நிறைவேறறப்படாமையே அதற்குக் காரணமாகும். அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், போர்க் காலத்தில் படையினர் மக்களிடம் பறித்த காணிகளை விடுவித்தல் ஆகிய விடயங்களை அவர்கள் சுட்டிக்காட்டினர். 10ஆம் திகதி கூட்டத்தைப் பற்றியும் அவர்கள் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. அக்கூட்டத்துக்கு நிகழ்ச்சி நிரல் ஒன்று இல்லாமை அதற்கு பிரதான காரணமாகியது. கடந்த 15ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவின் போது உரையாற்றிய ஜனாதிபதி, எதிர்வரும் இரண்டு ஆண்டுகளில் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பூரணமாக நிறைவேற்றுவதாக கூறினார். கடந்த 26ஆம் திகதி மீண்டும் பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளினதும் கூட்டமொன்றை அவர் கூட்டிய போதிலும், அதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட சில கட்சிகள் வரவில்லை.

இச்சம்பவங்கள் ஊடகங்களில் வெளியாகி, சகலரும் அறிந்தவை தான். ஆயினும், அவற்றை ஒன்று திரட்டிப் பார்ககும் போதே என்ன நடக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

ஆரம்பத்திலிருந்தே ஜனாதிபதியின் திட்டங்கள் நடைமுறை சாத்தியமற்றதாகவே தென்பட்டன. 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர், இனப்பிரச்சினையை தீர்ப்பேன் என்று ஜனாதிபதி கூறும் போது, அதற்கு இரண்டு மாதங்கள் மட்டுமே இருந்தன. எனவே அதை எவரும் நம்பவில்லை.

அதனாலோ என்னவோ, டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி 'சர்வகட்சி' கூட்டத்தின் போது, கடந்த காலங்களில் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராக இருந்தவர்களும் ஜனாதிபதியின் திட்டங்களை எதிர்த்துப் பேசவில்லை.

ஜனவரி ஐந்தாம் திகதியாகும் போது, தமிழ் கட்சிகள் தமது நம்பிக்கையின்மையை ஜனாதிபதியின் முகத்துக்கே கூறினர். தைப்பொங்கலன்று ஜனாதிபதியே தமது வாக்குறுதியை மாற்றிக் கொன்டார். இரண்டு மாதங்களில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பேன் என்று முன்னர் கூறியவர், அன்று அதனை தீர்ப்பதற்காக தமிழ்க் கட்சிகள் முன்வைத்த மூன்று கட்ட திட்டத்தில் இரண்டாவது கட்டமான அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை பூரணமாக நிறைவேற்றுவதை மேலும் இரண்டு வருடங்களில் செய்வேன் என்றார். இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காண்பேன் என்ற பேச்சு இப்போது இல்லை.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மேலும் இரண்டு வருடங்களில் பூரணமாக நிறைவேற்றுவேன் என்பது முன்னைய வாக்குறுதியைப் பார்க்கிலும் யதார்த்தபூர்வமானதாகும். அதையாவது அவர் நிறைவேற்றுவாரா என்பது வேறு விடயம். இதனை அடிப்படையாக வைத்தே கடந்த 26 ஆம் திகதி அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதன் போதும் எத்தனை கட்சிகள் நேர்மையாக நடந்து கொண்டன என்பது கேள்விக்குறியாகும்.

'யுத்துகம' (கடமை) என்ற அமைப்பின் உறுப்பினரான கெவிந்து குமாரதுங்க மட்டும், மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதை எதிர்த்து பேசினார். அப்போது ஜனாதிபதி, மாகாண சபைகளுக்கு அவ்வதிகாரங்கள் அமலாக்கக்கூடிய வகையில் வழங்க வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தார். அது பாராட்டக்கூடிய விடயமாகும். அரசியலமைப்பின் மூலம் அவ்வதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன என்றும் அவற்றை அமலாக்குவதற்கான நடைமுறை பொறிமுறைகளை உருவாக்குவது மட்டுமே மீதமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

அது உண்மை தான். காணி, பொலிஸ் அதிகாரங்கள் அரசியலமைப்பில் மாகாண அதிகார பட்டியலில் இருக்கின்றன. ஆயினும் மாகாண சபைகள் அவ்வதிகாரங்களை பாவிப்பதாயின் அதற்காக மாகாண பொலிஸ் பிரிவொன்றையும் காணி ஆணைக்குழு ஒன்றையும் வர்த்தமானி மூலம் ஜனாதிபதி உருவாக்க வேண்டும்.

இதற்குத் தான் ஜனாதிபதி இப்போது இரண்டு வருடங்கள் தேவை என்கிறார். எதற்காக அவ்வளவு காலம்? நாம் ஏற்கெனவே பிரிதொரு கட்டுரையில் குறிப்பிட்டதைப் போல், இனப்பிரச்சினையை தீர்ப்பதாக இருந்தால் இதுவே சிறந்த தருணமாகும்.

ஏனெனில், இப்போது தெற்கில் இனவாத சக்திகள் அரசியல் ரீதியில் பலவீனமாக இருக்கின்றன. அவர்கள் பலமாக இருந்த காலத்தில், ஜனாதிபதி ஒருவர் மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க வேண்டும் என்று கூறியிருந்தால், அவர்கள் இந்நேரம் எத்தனை பொதுக் கூட்டங்களையும் மாநாடுகளையும் நடத்தி பெரும்பான்மையின மக்களை தூண்டிவிட்டு இருப்பார்கள்?

சுதந்திர தினத்துக்கு முன்னர் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை பூரணமாக அமலாக்கி, இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றையும் காண்பேன் என்று நடைமுறை சாத்தியமற்றதையும் கூறியவர் நடைமுறை சாத்தியமானதை நிறைவேற்ற இரண்டு வருடங்களை கேட்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க, தந்திரங்களில் அவரது மாமனாரான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தனவையும் விஞ்சியவர் என்று கூறினாலும் பிழையாகாது. 2017ஆம் ஆண்டு அவருக்கு மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திவைக்கும் தேவை ஏற்பட்டது. அப்போது அவர் சகல அரசியல் கட்சிகளும் ஏற்றும் கொண்ட கலப்பு தேர்தல் முறையை மாகாண சபைகள் விடயத்திலும் அறிமுகப்படுத்தி அதனை சாதித்துக் கொண்டார்.

இப்போது அவருக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திப் போடும் அவசியம் ஏற்பட்டுள்ளது. அவர் முதலில் எவரும் மறுக்காத அம்மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை 8,000 இருந்து 4,000 வரை குறைக்கும் திட்டத்தை முன்வைத்தார்.

தேர்தலை பிற்போடவே அவர் இதனை முன்வைக்கிறார் என்று எதிர்க்கட்சிகள் கூறவே அவர் தேர்தல் சட்ட திட்டங்களில் மாற்றங்களை கொண்டு வர, பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்க முயன்றார். அதுவும் எவரும் மறுக்க முடியாத விடயமாகும்.

அதற்குள் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டது. அப்போது தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடு இருப்பதாக கூறினார். அதை அவ்வாணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா மறுத்தார்.

அதேபோல் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தேர்தல் பிரசாரங்கள் தடையாக அமையலாம் என்றார். ஆனால், தேர்தல் ஆணைக்குழு அதையும் பொருட்படுத்தவில்லை. இப்போது தேர்தலுக்கு பணம் இல்லை என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில், அதுவும் மிகவும் பலமான வாதமாகும். அத்தோடு தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களிடையே இப்போது பிளவுகளும் உருவாகி இருக்கின்றன.

எனவே, தமிழ்த் தலைவர்களும் அக்கறைகாட்டாத ஒரு சந்தர்ப்பத்தில் தாமாக முன்வந்து இனப்பிரச்சினையை தீர்க்கப்போகிறேன் என்று கூறி, காலத்தை வீணடிக்கும் வகையில் நிலைப்பாடுகளை மாற்றிக் கொள்வதும் வேறு காரணங்களுக்காகவா என்ற கேள்வியும் எழுகிறது. அதாவது, அரசாங்கம் இந்தப் பிரச்சினையை பாவித்து பெரும்பான்மை சமூகத்திடையே குழப்பத்தை ஏற்படுத்தி பொருளாதார பிரச்சினைகளிலிருந்து அவர்களது கவனத்தை திருப்பவா முயல்கிறது?

அல்லது, இந்திய உதவி மிகவும் அவசியமாக இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் இந்திய தலைவர்களுக்கு தமிழகத்தில் அரசியல் செய்வதை இலகுவாக்கி, அதன் மூலம் அவர்களது மனதை வெல்லவா அரசாங்கம் நடவடிக்கை எடுக்கிறது? சிலவேளை, அண்மைக்கால அடக்குமுறைகள் காரணமாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கி இருக்கும் அரசாங்கம் மனித உரிமை அமைப்புகளின் மனதை வெல்ல முயல்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

காலத்துக்குக் காலம் அரசியல்வாதிகள் இவ்வாறு செய்கிறார்கள். மஹிந்த ராஜபக்ஷவின் 'தேர்டீன் பிளஸ்' (13+) திட்டமும் அதுபோன்ற ஒன்றாகும். அதுவும் அடிக்கடி வெளியே எடுத்து காட்டிவிட்டு மீண்டும் பெட்டிக்குள் போட்டுக் கொள்ளும் ஒரு கருவியாகும்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் பிரசார காலத்திலும், அவர் சில சிறிய தமிழ் கட்சிகளின் தலைவர்களை அழைத்து, இந்த வாக்குறுதியை அளித்திருந்தார் என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## கடிதங்கள்

### மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம்

## கிராமங்களுக்கு பஸ் சேவை தேவை

முல்லைத்தீவு மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் ஆகிய கிராமங்களுக்கு பஸ் சேவை நடத்துமாறு, இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர், இக்கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்த போதும் இதுவரை பஸ் சேவைகள் நடைபெறவில்லை. 450இற்கும் மேற்பட்ட குடும்பங்கள், இக்கிராமங்களில் வாழ்கின்றன. 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் முல்லைத்தீவு நகரில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் சேவை நடைபெற்றது. போர்க் காலத்திலும் இக்கிராமத்துக்கான பஸ் சேவைகள் நடைபெற்றன.

2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் இக்கிராமங்களுக்கு பஸ் சேவைகள் நடத்தப்பட வேண்டும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், கரைதுறைபற்று பிரதேச செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் பஸ் சேவைகள் இடம்பெறவில்லை.

பஸ் சேவைகள் இடம்பெறாததன் காரணமாக முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகரங்களுக்கு மாலை நேர வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்கள், போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். அம்பலவன்பொக்கணை மகா வித்தியாலயம், மாத்தளன் அ.த.க பாடசாலை, வலைஞர்மடம் அ.த பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு வருகை தரும் ஆசிரியர்கள், நீண்ட காலமாக நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மேற்படி கிராமங்களுக்கு பஸ் சேவை நடத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

– நடராசா கிருஸ்ணகுமார்

பாகிஸ்தான்

# பாகிஸ்தானில் பயங்கரம்: 87 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானின் பெஷாவர் நகரில் உள்ள பள்ளிவாசலொன்றில் நேற்று முன்தினம்(30) 'தெரீக்-இ-தலிபான்' அமைப்பினரால் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 87 ஆக அதிகரித்துள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த பள்ளிவாசலுக்குள் திடீரென நுழைந்த பயங்கரவாதியொருவர், தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளார்.

இதில் குறித்த பள்ளிவாசலானது முற்று முழுதாக இடிந்து தடைமட்டமாகியுள்ளது.

இந்நிலையில் இத்தாக்குதலில் 87 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 150 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சிகிச்சை பெற்றுவருபவர்களில், பலரது நிலை கவலையளிக்கும் வகையில் இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் உயரலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

சீனா

## திருமணமாகாதவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ள அனுமதி

சீனாவில் திருமணமாகாதவர்கள் சட்டப்பூர்வமாகக் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் கடந்த சில ஆண்டுகளாகக் குழந்தை பிறப்பு விகிதமானது தொடர்ந்து சரிவடைந்து கொண்டு செல்கின்றது.

குறிப்பாக பிறப்பு விகிதத்தை விட இறப்பு விகிதம் அதிகரித்துக் கொண்டு செல்வதால் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சீனாவில் மக்கள் தொகை சரிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க சீன அரசு பல்வேறு நடவடிக்கைகளை அண்மைக் காலமாக எடுத்து வருகின்றது.

அமெரிக்கா

## கரை ஒதுங்கிய இராட்சத திமிங்கலம்



அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணத்தில் ஹெம்ப்ஸ்டெட் நகரில் உள்ள லிடோ கடற்கரையில் ஹம்ப்பேக் இனத்தைச் சேர்ந்த இராட்சத திமிங்கலம் ஒன்று அண்மையில் கரையெதுங்கியுள்ளது.

சுமார் , 35 அடி நீளம் கொண்ட குறித்த திமிங்கலமானது உயிருக்கு ஆபத்தான நிலையில் கரை ஒதுங்கியதாகவும், பின்னர் உயிரிழந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல்

## கதிரையில் அமர்ந்த பொலிஸ் அதிகாரி இடை நீக்கம்



நாமக்கல்லில் கடந்த 28ஆம் திகதியன்று அரசு சார்பில் பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி வைக்கும் விழாவொன்று நடைபெற்றுள்ளது.


இந்நிகழ்ச்சியில் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உட்பட பல பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் குறித்த நிகழ்வில் தேசிய கீதம் இசைக்கப்பட்டபோது, பாதுகாப்பு பணியில் இருந்த நாமக்கல்லைச் சேர்ந்த சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் தேசிய கீதத்திற்கு மரியாதை செலுத்தாமல்,கதிரையில் அமர்ந்தவாறு தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்துள்ளார்.

இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி வைரலானதைத் தொடர்ந்து, குறித்த பொலிஸ் அதிகாரி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்காசி

## திருமணம் செய்ததால் கிராம மக்களின் கால்களில் விழுந்த இளைஞர்



தென்காசியில் மாற்றுச் சமூகத்தைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்தவரை, அக்கிராம மக்கள் தமது கால்களில் விழ வைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தென்காசி மாவட்டம், நல்லூர் கிராமத்தை சேர்ந்த பாலமுருகன் என்பவர் மாற்று சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை அண்மையில் திருமணம் செய்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அக்கிராம மக்கள் குறித்த இளைஞரை, தமது கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்குமாறு வற்புறுத்தியுள்ளதோடு, அக்கிராமத்தை விட்டும் குறித்த தம்பதியை விலக்கி வைத்துள்ளனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட தம்பதி இது குறித்து அப்பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர்.

இதனையடுத்து , நான்கு பேர் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வேலூர்

## சிறுமிக்குக் காதல் தொல்லை: குடும்பத்தினர் மீது தாக்குதல்

வேலூர் மாவட்டம், தலுகா பகுதியில் உள்ள பாடசாலையொன்றில் 12 ஆம் தரத்தில் கல்வி கற்றுவரும் மாணவியொருவருக்கு, அப்பகுதியைச் சேர்ந்த சந்தோஷ் என்ற இளைஞர் நீண்ட காலமாகத் காதல் தொல்லை கொடுத்து வந்துள்ளார்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து அறிந்த அம்மாணவியின் தந்தை சந்தோஷைத் தாக்கியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சந்தோஷ், தனது ஆதரவாளர்களுடன் சேர்ந்து குறித்த மாணவியின் வீடு புகுந்து அவரது குடும்பத்தினரைத் தாக்கியுள்ளார்.

இதில் படுகாயமடைந்த மாணவியின் குடும்பத்தினர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் தாக்குதல் நடத்திய அனைவரையும் கைது செய்யக்கோரி, மாணவியின் உறவினர்கள் ,பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது உறவினர்களில் ஒருவர் திடீரென மறைத்து வைத்திருந்த மண்ணெண்ணெயை உடலில் ஊற்றி தீக்குளிக்க முயற்சி செய்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



இன்று மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டி

## தொடரைக் கைப்பற்றுவது இந்தியாவா, நியூசிலாந்தா?

இந்தியா, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியானது அஹமதாபாத்தில் இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்தும், இரண்டாவது போட்டியில் இந்தியாவும் வென்றிருந்த நிலையில், இப்போட்டி தொடரைத் தீர்மானிக்கும் போட்டியாக இன்றைய போட்டி அமையவுள்ள நிலையில், மீண்டுமொரு முறை சுழற்பந்துவீச்சே போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியக் குழாமிலுள்ள இத்தொடரில் விளையாடாத ஏனைய வீரர்களான முகேஷ் குமார், ஜிதேஷ் ஷர்மா, பிறித்திவி ஷோவுக்கு இப்போட்டியில் வாய்ப்புக் கிடைக்கலாம் எனத் தெரிகிறது.

மறுபக்கமாக நியூசிலாந்திலும் குழாமிலிருந்து இதுவரையில் வாய்ப்புக் கிடைக்கப் பெறாத டேன் கிளவர், பெஞ்சமின் லிஸ்டர், மிஷெல் றிப்பன் உள்ளிட்டோருக்கு இப்போட்டியில் வாய்ப்புக் கிடைக்கலாம்.



சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து

## ஓய்வு பெற்ற முரளி விஜய்

சர்வதேசப் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் முரளி விஜய் அறிவித்துள்ளார்.

இறுதியாக 2018ஆம் ஆண்டு இந்தியாவுக்காக விளையாடிய விஜய், 61 டெஸ்ட்களில் 38.28 என்ற சராசரியில் 3,982 ஓட்டங்களைப் பெற்றதுடன், 17 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும், ஒன்பது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளிலும் விளையாடியிருந்தார்.

## பாகிஸ்தான் அணியின் பணிப்பாளராக ஆர்தர்?



பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பணிப்பாளராக மிக்கி ஆர்தர் வருவதுக்கு இணங்குவதை அவ்வணியின் முன்னாள் தலைமைப் பயிற்றுவிப்பாளர் ஆர்தரும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் நெருங்கியுள்ளன.

முன்னதாக மூன்று வாரங்களுக்கு முன்னர் இரண்டு தரப்பு பேச்சுவார்த்தைகளும் முடிவுக்கு வந்தபோதும், ஆர்தரை கொண்டு வருவதை தொடருவதாக கிரிக்கெட் சபையின் இடைக்காலத் தலைவரான நஜாம் சேதி தெரிவித்திருந்தார்.

அதிவேக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில்

## மூன்றாமிடம் பெற்ற சாய்ந்தமருது அஸ்ஜத்



அஸ்ஹர் இப்றாஹிம்

ரஷ்யாவில் நடைபெற்ற அனைத்து பல்கலைக்கழக மாணவரகளுக்கிடையிலான அதிவேக சதுரங்க சம்பியன்ஷிப் போட்டியில் சாய்ந்தமருதைச் சேர்ந்த அஸ்ஜத் அசீஸ் மூன்றாமிடத்தைப் பெற்றார்.

ரஷ்யாவின் குர்ஸ்க் பிராந்தியத்தின் விளையாட்டு துறை அமைச்சரால் இப்போட்டியில் நடாத்தப்பட்டது.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக

## ஆறுதல் வெற்றி பெறுமா இங்கிலாந்து?

தென்னாபிரிக்க, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியானது கிம்பெர்லியில் இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் வென்று தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியுள்ள நிலையில், றீஸா ஹென்ட்றிக்ஸ், ஜனமென் மலன் உள்ளிட்டவர்களுக்கு இப்போட்டியில் வாய்ப்புக் கிடைக்கலாம்.

நடப்புலக சம்பியன்களாவுள்ள இங்கிலாந்தின் அண்மைய பெறுபேறுகள் மோசமாகவுள்ள நிலையில், இவ்வாண்டு உலகக் கிண்ணம் இடம்பெறவுள்ள அதை வெகுவிரைவில் திருத்த அவ்வணி எதிர்பார்க்கும் என்ற நிலையில், பந்துவீச்சில் பாரியளவு முன்னேற்றத்தை காண்பிக்க வேண்டியுள்ளது. தவிர பில் ஸோல்டுக்கு இப்போட்டியில் வாய்ப்புக் கிடைக்கலாம்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 01 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.